**<u>IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,</u>**

**<u>TENKASI.</u>**

**Date : 06.07.2026**

**OS No. : 411/2022**

**Pw : 1**

**Name : திரு. அண்ணாமலை**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

பிரதிவாதிக்கு மும்பையில் உள்ள யூனியன் வங்கியிலிருந்து 5 லட்ச ரூபாய் பணத்தை எடுத்துக்கொடுத்தேன். மேற்படி பணத்தை சென்னையில் உள்ள வங்கி கிளையிலிருந்து எடுத்தேன், அந்த தேதி தற்போது நியாபகமில்லை. பிரதிவாதி பணம் கேட்ட பின்னர் வா.சா.ஆ.1 எழுதுவதற்கு 2 நாட்களுக்கு முன்னர் நான் வங்கியிலிருந்து பணத்தை எடுத்தேன். அந்த வங்கி கணக்கை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அந்த வங்கி கணக்கு தற்போது உபயோகத்தில் இல்லாமல் மூடப்பட்டுவிட்டதால் மேற்படி வங்கி கணக்கு அறிக்கையை என்னால் தாக்கல் செய்ய இயலாது. நான் மேற்படி வங்கியில் கணக்கு வைத்திருந்ததை காட்டக்கூடிய ஏதேனும் ஒரு ஆதரவை தாக்கல் செய்ய முடியுமா என்றால் கணக்கு மூடப்படும் சமயம் அனைத்து ஆவணங்களையும் வங்கியில் ஒப்படைத்துவிட்டேன். நான் 19.06.2021, 20.06.2021 ஆகிய தேதிகளில் சென்னையிலிருந்து பணம் எடுத்திருக்கலாம். பிரதிவாதி என்னிடம் கடந்த 18.06.2021ம் தேதி பணம் கேட்டார். பிரதிவாதியின் ஆதார் கார்டு நகலை நான் பெற்றுக்கொண்டேன். நான் தற்போதும் சென்னையில் வசித்துவருகிறேன், இந்தியா முழுவதும் வேலை விஷயமாக சென்றுவருவேன்.

என்னுடைய மாத வருமானம் எவ்வளவு என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் என்னுடைய வருமான வரி கணக்கு அறிக்கை உள்ளது, அதை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். கடந்த 2021 – 2022 ஆண்டிற்கான வருமான வரி கணக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இன்று நீதிமன்றத்திற்கு என்னுடன் வந்துள்ள திரவியம், என்னுடைய மைத்துனர் என்றால் சரிதான். அவர் ஒவ்வொரு வாய்தாவிற்கும் என்னுடன் நீதிமன்றத்திற்கு வருவார் என்றால் சிலசமயம் அவர் தனது சொந்த வேலையாக வருவார். மேற்படி திரவியம் என்ன வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. இந்த பிரதிவாதி அந்தோணி பீட்டர் ராஜ் மீது மேற்படி திரவியம் சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் ஒரு சிவில் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. திரவியத்தின் தம்பி குமாரும் இதே பிரதிவாதியின் மீது சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் ஒரு சிவில் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. மேலும் சுடலை வேல் குமார் என்ற நபரும் இதே பிரதிவாதியின் மீது சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் ஒரு சிவில் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. இவ்வழக்கில் இடைக்கால நிவாரணம் கோரி நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் மீதும், திரவியம் மீதும், பிரதிவாதி காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி புகாரின் அடிப்படையில் போலீசார் விசாரணை செய்தபோது, நான் சென்னையில் இருப்பதாக திரவியம் தெரிவித்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி அஞ்சல் துறையில் பணிபுரிந்துவரும் நபர் என்றும், அவர் என்னிடம் கடன் கேட்க வேண்டிய அவசியம் இதுவரை ஏற்பட்டது கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் 2021ம் வருடம், கொரோனா காலக்கட்டம் என்றால் சரிதான். எனது மைத்துனர் திரவியம் வட்டித்தொழில் செய்துவருகிறார் என்றும், அவரது தூண்டுதலின் பேரில் நான்

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த காலத்திலும் என்னிடம் பணம் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi